இப்படித் தள்ளிக்கொண்டு போவதால் இன்னொரு தலை முறை வந்துவிடும் போல் இருக்கிறது. ஆகவே, கான்ட்ராக்ட் எடுத்து விட்டு, அரசே செயல் முறையில் அரசு அதிகாரிகளைக் கொண்டு அந்தப் பாதையைச் சீரமைக்கும் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 6 (1)-ன் கீழ் திரு. எஸ் ஜே. இராமசாமி அவர்களை மாற்றுத் தலைவராக நியமிக்கிறேன்.

8. 1978–79-ஆம் ஆண்டுக்கான மான்யக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)

திரு. த. புஸ்பராஜு : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இன்று வந்துள்ள மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்தை இங்கே கூறுகிறேன்.

பஸ்கள் தேசியமாக்கப்பட்டவுடன் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் எடுத்து நடத்தப்பட்ட பல பஸ் தடங்கள் இன்று பஸ் ஓடாமல் நிறுத்தப்பட்டுள்ள ஒரு நிலையை நம் தமிழகத்தில் இன்று பார்க்கின்றோம். இந்த நிலையை அரசு மாற்ற வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு மேல் தனியார்கள் மூலம் நல்ல முறையில் லாபத்தில் ஓடிக் கொண்டிருந்த பஸ்கள் கூட போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் எடுத்து நடத்தப்பட்டு லாபம் இல்லை என்ற காரணத்தால் இன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலையை அரசு உணர்ந்து லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், ஏழை எளிய பொதுமக்கள் வசதியைக் கருதி உடனடியாக இவ்வாறு நிறுத்தப்பட்ட பஸ்களை ஓட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு விரைவுப் பேருந்துகள் குறிப்பிட்ட நேரத்திற்கு வருவது இல்லை. கூடியவரை குறிப்பிட்ட நேரத்திற்கு ஓட்டுமாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக வாடகைக்குக் கொடுக்கப்படுகின்ற ஒப்பந்த ஊர்திகளுக்கு வாங்கப்படுகின்ற வாடகையும், டீசலுக்காக வாங்குகின்ற செலவுத் தொகையும், தனியார் வாங்குவதை விட அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஒப்பந்த ஊர்திகளுக்கு வாடகையைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களுக்காகக் கட்டப்பட்டிருக்கின்ற பணிமனைகளில் பல வசதிக் குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக பல பணிமனைகளில் தரை கூட கான்கிரிட் போடாத ஒரு கலையும், மேற்கூரையும் இல்லாத ஒரு நிலையினையும் நாம் இன்று காண்கிறோம். இந் நிலையினைப் போக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.